பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 20 திங்கட்கிழமை 04.07.2022 கதிர் 132


## சிறுவனுக்கு எமனான ரம்புட்டான்

ரம்புட்டான் பழத்தை விழுங்கிய 10 வயதுச் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தார்.

யாழ்., காங்கேசன்துறை - கொல்லன்கலட்டியைச் சேர்ந்த தர்மராசா தர்சிகன் எனும் சிறுவனே உயிரிழந்தார்.

(விரிவான செய்தி 08ஆம் பக்கத்தில்)

## பெண் பிரதம நிர்வாக அதிகாரி கொடூரமாக வெட்டிக் கொலை!



பிரதம நிர்வாக அதிகாரியான இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம்பொலன்னறுவை - தல்பொத்த என்ற இடத்தில் இன்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை - லங்காபுர பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் 42 வயதுடைய ☞2

## இரட்டைக் கொலை சூத்திரதாரி பொலிஸாரால் சுட்டுக் கொலை



கொழும்பு, புறக்கோட்டை - பெஸ்டியன் மாவத்தையில் கடந்த மே மாதம் துப்பாக்கிச்சூடு நடத்தி இரட்டைக் கொலையை மேற்கொண்ட பிரதான சந்தேகநபர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இன்று அதிகாலை 4 மணியளவில் கம்பஹா - பெம்முல்ல பிரதேசத்தில் பொலிஸாருக்கும் சந்தேகநபருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் அவர் பலியாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். ☞2

பொருளாதார நெருக்கடியால்

## குடும்பஸ்தர் தற்கொலை

மதவாச்சியில் பொருளாதார நெருக்கடி காரணமாக வேலையில்லாமல் இருந்த 26 வயதுடைய ஒரு பிள்ளையின்தந்தைதற்கொலைசெய்துள்ளார்.

மதவாச்சியில் ரயிலில் கழுத்தை வைத்து அவர் தற்கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதவாச்சி பிரதேசத்தைச் சேர்ந்த சுஜித் தில்ஷான் என்ற இளம் ☞2

## சர்வகட்சி அரசை உடன் அமைக்குக

### சபையில் வலியுறுத்து



மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று சர்வகட்சி அரசு அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் இன்று வலியுறுத்தப்பட்டது.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ☞2

# கரும்புலிகள் நாளில் வெடிகுண்டு மிரட்டலா?

### பாதுகாப்புச் செயலாளருக்குப் பொலிஸ்மா அதிபர் அனுப்பிய கடிதம் தொடர்பில் அரசிடம் அநுர கேள்வி



**ஜூலை 5 அல்லது 6 ஆம் திகதிகளில் வடக்கு, கிழக்கு அல்லது தென்னிலங்கையில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என எச்சரித்து, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குப் பொலிஸ்மா அதிபர் அனுப்பிய கடிதம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இன்று கேள்வி எழுப்பினார்.** ☞2

## வடக்கு கடல் வளத்தைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

### சபையில் டக்ளஸிடம் தயாசிறி கேள்வி



நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டால் கடற்படையினருக்கு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட முடியாதுள்ளது. இந்நிலையில் வடக்கு கடற்பரப்பை இந்திய மீனவர்கள் ஆக்கிரமிக்கின்றனர். எனவே, எமது கடல் வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சபையில் ☞2

## இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு கைது நடவடிக்கையால் தக்க பதிலடி

### தொடரும் என்று டக்ளஸ் உறுதி



இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

'இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து வடக்கு கடல் வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுமா?' என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் இன்று எழுப்பிய கேள்விக்குப் ☞2



## யாழில் 291 லீற்றர் டீசலுடன் கடை உரிமையாளர் கைது!

யாழ்ப்பாணம், அளவெட்டிப் பகுதியில் டீசலைப் பதுக்கி வைத்திருந்து அதிக விலைக்கு விற்பனை செய்த ஒருவரைத் தெல்லிப்பழைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவெட்டிப் பகுதியிலுள்ள கடை ஒன்றில் டீசல் பதுக்கி விற்பனை செய்யப்படுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ☞2

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தனியார் பஸ்கள் சேவையில்



நாடளாவிய ரீதியில் இன்று 1,500 முதல் 2,000 வரையான தனியார் பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுகின்றன என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று எங்களுக்குப் பல பஸ் டிப்போக்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இன்று போதுமான அளவு எரிபொருள் கிடைக்கும் பட்சத்தில் எதிர்வரும் மூன்று நாளகளுக்குத் தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியும்.

குறைந்தது 25 சதவீத பஸ் சேவைகளை முன்னெடுக்கும் பட்சத்தில் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ள முடியும்.

கடந்த 3, 4 நாள்களுக்கு மேலாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் டிப்போ எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக தனியார் பஸ்கள் வரிசைகளில் காத்திருக்கின்றன - என்றார்.

## ஐஸ் போதைப்பொருளுடன் கல்முனை நபர் சிக்கினார்



மோட்டார் சைக்கிளில் 20 கிராம் ஐஸ் போதைப்பொருளைக் கடத்திய சந்தேக நபரைக் கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கமைய அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட ☞2

## சர்வகட்சி அரசை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல் உட்பட ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி.,

இந்த அரசு மீது உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் நம்பிக்கை இல்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. அவர் தேசியப் பட்டியலில் சபைக்கு வந்தவர். மக்களின் பிரச்சினைகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை. பிரச்சினைகளும், வரிசைகளும் நீள்கின்றன. எனவே, அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சர்வகட்சி அரசு அமைக்கப்பட வேண்டும் - என்று வலியுறுத்தினார்.

அதன்பின்னர் எழுந்த எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., விமலின் கருத்தை வரவேற்றார். மகாநாயக்க தேரர்கள் விடுத்துள்ள கோரிக்கையின் பிரகாரம் சர்வகட்சி அரசு அமைய வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

எதிரணியின் மேலும் சில உறுப்பினர்களும் சர்வகட்சி அரசுக்குச் சார்பாகக் கருத்து வெளியிட்டனர்.

சர்வகட்சி அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் நேற்றுமுன்தினம் 10 அம்சங்களை முன்வைத்து கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய மீனவர்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிலளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் என்பது இன்று நேற்று நடைபெறும் விடயமல்ல. நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றது. இதனைத் தடுப்பதற்கு இலங்கைக் கடற்படையினர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகின்றனர். நேற்றுக்கூட அத்துமீறிய 12 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை தொடரும்.

அதேவேளை, எரிபொருள் தட்டுப்பாட்டால் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## வடக்கு கடல் வளத்தைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று கேள்வி எழுப்பினார்.

அத்துடன், எரிபொருள் பிரச்சினையால் கடற்றொழிலாளர்களுக்குத் தமது தொழிலை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும், அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தயாசிறி ஜயசேகர எம்.பி. இதன்போது வலியுறுத்தினார்.

## ஐஸ் போதைப் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கையின்போது இக்கைது இடம்பெற்றது.

கல்முனைப் பகுதியைச் சேர்ந்த 30 வயது நபரே நேற்றிரவு கைதுசெய்யப்பட்டார்.

ஒட்டமாவடிப் பகுதிக்கு குறித்த போதைப்பொருளை கடத்திச் செல்வதற்குத் தயாராக இருந்த வேளை கல்முனை கடற்கரைப்பள்ளி அருகிலுள்ள மைதானத்தில் வைத்து சந்தேகநபர் கைதானார்.

அவரிடமிருந்து 2 கைத்தொலைபேசிகள், பொதி செய்யப்பட்ட 20 கிராம் ஐஸ் போதைப்பொருள், பயணம் செய்த மோட்டார் சைக்கிள் என்பன விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டன.

குறித்த சந்தேகநபரிடமிருந்து போதைப்பொருளைக் கொள்வனவு செய்வதற்காக வாழைச்சேனை காகித புலனாய்வு அதிகாரிகள் அழைப்பை ஏற்படுத்தி குறிப்பிட்ட இடத்துக்கு அவரை வரவழைத்தனர். அவ்விடத்துக்கு மாறுவேடத்தில் சென்ற கல்முனை விசேட அதிரடிப் படையினரால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் சான்றுப்பொருட்களுடன் கல்முனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## யாழில் 291 லீற்றர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது 291 லீற்றர் டீசல் மற்றும் விற்பனைக்குப் பயன்படுத்திய உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

டீசலைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் 42 வயதுடைய கடை உரிமையாளரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

## கரும்புலிகள் நாளில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

அந்தக் கடிதத்தின் பிரகாரம் சர்வதேச உளவு நிறுவனங்களின் பங்களிப்புடன் மேற்படி இரண்டு தினங்களில் நடைபெறவுள்ள கரும்புலிகள் நினைவேந்தல் நிகழ்வுகளை இலக்கு வைத்து இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் எந்தவொரு நிகழ்வுகளிலும் பங்குபற்ற வேண்டாம் என வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சர்வதேச அமைப்புகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் பொதுமக்களை இந்தக் கடிதம் எச்சரித்துள்ளது.

இந்தத் தகவல்கள் பொலிஸ்மா அதிபரால் எப்படி, எங்கிருந்து பெறப்பட்டன என்பதையும், அப்படித் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதா என்பதையும் அரசு வெளிப்படுத்த வேண்டும்.

தற்போது நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் அரசுக்கு எதிரான போராட்டங்களையும் உணர்வுகளையும் நசுக்கவே இவ்வாறான செய்திகள் பகிரப்படுகின்றன என்ற சந்தேகம் எம்மிடம் எழுந்துள்ளது - என்றார்.

## பெண் பிரதம நிர்வாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எம்.எல். யமுனா பத்மினி என்ற பெண் பிரதம நிர்வாக அதிகாரியே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவம் இடம்பெறும் போது பெண்ணின் கணவரும், பிள்ளைகளும் வீட்டில் இருந்துள்ளனர்.

குறித்த பெண்ணைக் கொலை செய்தது யார், என்ன காரணத்துக்காகக் கொலை செய்யப்பட்டார் என்பதைக் கண்டறிய பொலனறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஓவன் ஹேவா வித்தாரணவின் உத்தரவின் பேரில் விசேட பொலிஸ் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

## இரட்டைக் கொலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்த சந்தேகநபர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபரை கைதுசெய்யச் சென்ற போது, அவர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார். இதையடுத்துப் பொலிஸார், அவரைத் துரத்திச் சென்றுள்ளனர்.

பின்னர், சந்தேகநபர் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுப் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்திய நிலையில் பதிலுக்குப் பொலிஸாரும் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் அவர் பலியாகியுள்ளார்.

40 வயதுடைய இஹல வித்தானகே ஜோஸப் என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

## குடும்பஸ்தர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்

குறித்த நபர் கடந்த முதலாம் திகதி இரவு 7 மணியளவில் வீட்டில் இருந்து வந்து மன்னார் வீதி, யகாவெவ ரயில் கடவையில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரம் சென்று ரயில் வரும் வரை காத்திருந்துள்ளார்.

தலைமன்னாரில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற ரயில் எதிரே ஓடி வந்து தண்டவாளத்தில் தலையை வைத்துள்ளார். இதனால் சாரதியால் ரயிலை உடனே நிறுத்த முடியாமல்போயுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தீர்வுக்கு வழி

நாட்டின் இன்றைய நிலைக்கு யார் பொறுப்பு? இதை நிவர்த்தி செய்யப் போகின்றவர்கள் யார்? எப்படி? இந்த நிலைமை தொடர்கின்ற சூழலுக்கு யார் காரணம்? – இப்படியெல்லாம் பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

இந்த நிலைமை ஏற்பட்டமைக்கு யார் காரணம்? இதைத் திருத்தாமல் இருப்பதற்கு யார் பொறுப்பு? – இந்த இரண்டு கேள்விகள் மட்டுமே இன்றைய நிலையில் பிரதானமானவை.

இந்த இரண்டு விடயங்களிலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பான சில பொதுவான பதில்கள் உண்டு. அவை கவனிக்கப்பட வேண்டும்.

இன்றைய நிலைமைக்கு – மோசமான கட்டத்துக்கு – நிறைவேற்று அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு முன்னாள்ராணுவ அதிகாரியான கோட்டாபய ராஜபக்ஷ எதேச்சாதிகாரமாக நடத்திய – நடத்திக் கொண்டிருக்கின்ற – காட்டுத் தர்பார் திருக்கூத்துத் தான் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

தமிழினத்தை கொன்றொழிக்கும் யுத்த வெறியும் அதற்காக எல்லை மீறிக் கடன் வாங்கிச் செலவிட்ட நிதியும், நிர்வாகச் சீர்கேடுகளும், ஊழல் – மோசடிகளும், அரச சொத்துக்களை சூறையாடியமையும் இந்நிலைமை ஏற்படக் காரணம் என்பதும் –

அது கோட்டாபயவின் ஆட்சிக்காலத்துக்கு முந்தி இருந்தே பெருத்த எடுப்பில் முன்னெடுக்கப்பட்டு, இப்போது ஒன்று சேர நாட்டின் கழுத்தைப் பிடிப்பது மாதிரி நெருக்கி வந்திருக்கின்றது என்பதும் – உண்மையானவை. பொய்க் கூற்றுகள் அல்ல.

ஆனால், இந்த இக்கட்டு இவ்வளவு குறிய காலத்தில் மோசமாக வந்து சூழுவதற்கு கோட்டாபயவின் தவறான – கீழ்த்தரமான – புத்திசாலியமற்ற – நடவடிக்கைகளே காரணம்.

அத்தகையவரை இந்தப் பதவிக்கு கொண்டு வந்த பௌத்த, சிங்களப் பொது மக்களே இந்த குற்றங்களின் சூத்திரதாரிகள், அவர்களால் மட்டுமேதான் இந்த ஜனாதிபதிப் பதவிக்குத் தாம் வந்தார் என்பதை கோட்டாபயவே பல தடவைகள் கூறியிருக்கின்றார்.

ஊழல் – மோசடிகள், நாட்டைச் சூறையாடல், குடும்ப ஆட்சி போன்ற அராஜகங்கள் ராஜபக்ஷக்களின் ஆட்சியில் தொடரும் என்று எச்சரிக்கைகளுக்கு மேல் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், அவற்றையெல்லாம் மீறி, தென்னிலங்கை அவருக்கு வாக்குகளை அள்ளிக் கொட்டி ஏக தலைவராக பெருவெற்றி அடைய வைத்து பௌத்த, சிங்கள பேரினவாதத்தை நிலை நிறுத்தியதாக மார் தட்டிக் கொண்டது. மகிழ்ந்தது. அதன் விளைவை இப்போது மற்றவர்களுடன் சேர்ந்து அதுவும் அனுபவிக்கின்றது.

சரிஅடுத்த கேள்வி. இந்த நிலைமையை மாற்றக் கூடியவர்கள் யார்? சட்ட ரீதியாக இந்த நிலைமையை மாற்றக் கூடியவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான். ஆனாலும் அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் அதற்குத் தயாராக இல்லை. அதற்குக் காரணம் அவர்களை கோட்டாபய பக்கத்தில் நின்று சேர்த்துக் கோர்த்துக் கட்டி வைத்திருக்கும் பௌத்த – சிங்களப் பேரினவாதமே.

ஆகவே, வெறுமனே தங்கள் வயிறு கடிப்பதால் – 'பக்கெட்' சுரண்டப்படுவதால் – எழும் எதிர்ப்புகளினால் மட்டுமே இந்த விடயத்துக்குத் தீர்வு கண்டுவிட முடியும் எனக் கருதுவது அர்த்தமற்றது.

இந்த நெருக்கடி நிலைமை ஏற்படுவதற்குக் காரணமாக – அது தொடர்ந்து நீடிக்கப்படுவதற்குக் காரணமாக – விளங்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதத் திமிர்த்தனத்திலிருந்து சிங்களம் வெளியே வர வேண்டும். உண்மையைப் புரிந்து, மனதார அதை ஏற்றுக் கொண்டு, வெளியே வர வேண்டும். வந்தால்தான் எதிர்காலத்திற்கு நியாயமான ஒரு தீர்வு கிட்டும். அதுவே தான் முக்கிய பாதையாகும். ஒரே மார்க்கமாகும்.

# எரிபொருளை உடனடியாக தாருங்கள் இல்லாவிட்டால் போராட்டம் தொடரும்!

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் காட்டம்




தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருளை பெற்றுத்தராத விடத்து பாடசாலைக்கு செல்ல முடியாது எனவும் மாணவர்களுக்கு தடையின்றி பொது போக்குவரத்தை தயார்ப்படுத்த வேண்டும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் நவரட்ணம் பிரதீபன் மற்றும் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட தலைவர் நடராசா மனோகரன் ஆகியோர்கள் திருகோணமலையில் உள்ள ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ந்தும் கருத்துரைத்த அவர்கள் –

எரிபொருளின்றி ஆசிரியர்கள் மட்டும் பாதிப்படையவில்லை. மீனவர்கள், விவசாயத் துறை என பல பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளோம்.

இந்த ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் ரணில் ஆகியோரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இதற்காக மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட வேண்டும்.

நாட்டை குட்டிச்சுவராக்கி விட்ட இவர்களை துரத்தியடிக்க வேண்டும். கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சுற்று நிரூபம் எதுவுமின்றி பாடசாலைக்கு செல்ல வேண்டும் என மாகாண கல்வி பணிப்பாளர் தெரி வித்துள்ளார். இவ்வாறு சுற்று நிரூபம் எதுவுமின்றி பாடசாலை செல்ல வேண்டும் என்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். எரிபொருளின்றி பறந்தா செல்வது எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஏனைய பகுதியில் 27 தொடக்கம் ஜூலை 10 வரை விடுமுறை வழங்கப்பட்ட போதிலும் கிழக்கில் மாத்திரம் எதிர்வரும் செவ்வாய் தொடக்கம் கிழமையில் மூன்று நாள்கள் பாடசாலை செல்ல வேண்டும் என்றிருப்பது நியாயமற்றது. ஒரு கிழமையில் ஒரு நாளாவது பிரத்தியேகமான ஆசிரியர்களுக்கான வரிசையை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்படுத்தி பெற்றோலைத் தர வேண்டும் .

செவ்வாய் அன்று மாகாண கல்வியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது. சரியான – சாதகமான – தீர்வு எட்டப்படாவிட்டால் புதன் கிழமை தொடக்கம் தொழிற் சங்க நடவடிக்கை தொடரும் என மேலும் தெரிவித்தனர்.

# இலங்கையின் பொருளாதாரம் மரணத்தின் விளிம்பில் உள்ளது!

## அமெரிக்க பொருளாதார நிபுணர் கருத்து

இலங்கையின் பொருளாதாரம் மரணத்தின் விளிம்பில் இருப்பதாக அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ள அவர், இலங்கையின் பணவீக்கம் தற்போது 122 வீதமாக உயர்ந்துள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் கூட இலங்கைக்கான கடன் முறையை நிராகரித்துள்ளது என்றும் அந்த நிதியத்தால், இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக 16 வேலைத் திட்டங்கள் தொகுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால் இலங்கை அதிகாரிகள் எவரும் அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதேநேரம், உலகில் வருடமொன்றுக்கு அதிக பணவீக்கம் விகிதம் பதிவாகிய நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் சுத்திகரிப்பு பணியாளர்கள் இன்று போராட்டத்தில் குதித்தனர்







மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்கள் மற்றும் சாரதிகள் இணைந்து இன்று (திங்கட்கிழமை) காலை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவன வீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த கழிவு அகற்றும் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாகத் தடைப்பட்டுள்ளன. உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படாமையால் கழிவு அகற்றும் நடவடிக்கையை முன்னெடுத்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மன்னார் நகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சுத்திகரிப்பு பணிக்கு, வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள்கள் உரிய முறையில் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணிக்குத் தேவையான எரிபொருளை வழங்கக்கோரி இந்தப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதார சேவைகளை தரம் தாழ்த்தி பார்ப்பது ஏன்?, பெற்றோல் பங்கீட்டில் உள்ளூராட்சி சேவைகள் புறக்கணிக்கப்படுவது ஏன்?, திண்ம கழிவகற்றல் சேவை அத்தியாவசிய சேவை என்று தெரியாதா அரச அதிபரே?'என பல்வேறு வாசகங்கள் உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட் டுள்ளனர். இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து சென்றுள்ளனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு
திங்கட்கிழமை
04.07.2022

# உக்ரைனின் பிவோடல் நகரை கைப்பற்றியது ரஷ்யா



நேட்டா நாடுகளின் கூட்டமைப்பில் உக்ரைன் சேருவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்த ரஷ்யா அந்நாட்டின் மீது கடந்த பெப்ரவரி மாத இறுதியில் போர் தொடுத்தது. ராணுவ கட்டமைப்புகளை தாண்டி அடுக்குமாடி குடியிருப்புகள், பள்ளிக்கூடங்கள், வணிக வளாகங்கள், ஆலைகள் என தாக்குதல் வரம்பை ரஷ்யா நீடித்ததால் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர். உக்ரைனின் லுஹான்ஸ்க் மாகாணத்தில் உள்ள முக்கிய நகரங்களை ரஷ்ய படைகள் ஏற்கனவே கைப்பற்றி விட்டன.

இந்நிலையில், லுஹான்ஸ்க் மாகாணத்தின் கடைசி முக்கிய நகரமான பிவோடலை கைப்பற்றி விட்டதாக ரஷ்ய பாதுகாப்புத்துறை மந்திரி தெரிவித்துள்ளார். ரஷ்ய அதிபர் புடினிடம் பாதுகாப்புத்துறை மந்திரி செர்கே ஷோய்கு கூறுகையில், லுஹான்ஸ்க் மக்கள் குடியரசின் மக்கள் ராணுவம் மற்றும் ரஷ்ய படைகள் இணைந்து நடத்திய போரில் பிவோடல் நகரம் முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என கூறினார் என ரஷ்ய செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

## பெல்கொரோட் நகரில் குண்டு வெடிப்பு



ரஷ்யாவில் உக்ரைன் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள பெல்கொரோட் நகரில் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 3 பேர் உயிரிழந்த நிலையில் பலர் படுகாயம் அடைந்தனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வங்களதேசத்தில் கனமழை 102 பேர் உயிரிழப்பு

வங்காளதேசத்தில் கடந்த மே மாதம் முதல் கனமழை பெய்தது. இதனால் அங்குள்ள பல்வேறு மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கி தத்தளித்தன. கடந்த 122 ஆண்டுகளில் கண்டிராத அளவுக்கு மிகவும் மோசமான வெள்ள பாதிப்பை அந்நாடு எதிர்கொண்டுள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.



வீடுகளை இழந்த மக்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டனர். மழை, வெள்ளத்தால் பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் வாகன போக்குவரத்து முடங்கி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த மே மாதம் 17ம் திகதி முதல் ஜூலை 3ம் திகதி வரையில் மழை தொடர்பான சேதங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 102 ஆக அதிகரித்துள்ளது. மழை வெள்ளத்தில் சிக்கி 75 பேரும், மின்னல் தாக்கி 15 பேரும், 2 பேர் பாம்பு கடித்தும், மேலும் 10 பேர் மற்ற காரணங்களுக்காக உயிரிழந்துள்ளனர். கனமழையால் சுமார் பல லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## டென்மார்க்கில் துப்பாக்கிச் சூடு 3 பேர் பரிதாபகரமாக சாவு





டென்மார்க்கில் வணிக வளாகம் ஒன்றில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் படுகாயம் அடைந்தனர். டென்மார்க்தலைநகர்கோபன்ஹேகன் நகரில்விமான நிலையம் அருகே உள்ள வணிக வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை என்பதால் மக்கள்கூட்டம்அதிகமாககாணப்பட்ட வேளையில் திடீரென துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. வணிக வளாகத்திற்கு வந்த இருவர் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சரமாரியாக சுட்டார். இதனால் அதிர்ச்சி அடைந்த வாடிக்கையாளர்கள் வணிக வளாகத்தில் இருந்து அலறி அடித்துக் கொண்டு வெளியேறினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார், வணிக வளாகத்தை சுற்றி வளைத்தனர்.

முழு நேர கடுமையான போராட்டத்திற்கு பிறகு துப்பாக்கிச் சூடு நடத்திய மர்ம நபர் பிடிபட்டார்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் வணிக வளாகத்தில் இருந்த 3 பேர் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் படுகாயம் அடைந்தனர். உயிரிழப்பு, காயம் அடைந்தோர் பற்றிய முழு விவரம் இன்னும் வெளியாகவில்லை.

22 வயது நிரம்பிய இளைஞர் துப்பாக்கிச் சூடு நடத்தியதற்கான காரணம் என்ன , பயங்கரவாத தொடர்பு இருப்பதா என்பது பற்றி டென்மார்க் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## புயலில் சிக்கி மூழ்கும் கப்பல் ஊழியர்களை மீட்க போராடும் கடலோர காவல்படை

கொங்ஹொங்காங்கின் தெற்கே 300 கி.மீ. தொலைவில் வெப்பமண்டல புயலில் கப்பல் சிக்கி மூழ்கத் தொடங்கியது. கடலோர காவல்படையினர் மீட்பு பணியில் ஈடுபடுகின்றமை தொடர்பான படத்தை கொங்ஹொங்காங் அரசு வெளியிட்டுள்ளது. தென் சீனக் கடலில் இயக்கப்படும் என்ஜினீயரிங் கப்பல் ஒன்று, கொங்ஹொங்காங் அருகே புயலில் சிக்கி கவிழ்ந்துள்ளது. சுமார் 30 ஊழியர்களுடன் சென்றுகொண்டிருந்த அந்த கப்பல், கொங்ஹொங்காங்கின் தெற்கே 300 கி.மீ. தொலைவில் வெப்பமண்டல புயலில் சிக்கியது. இதனால் கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கிக் கொண்டிருக்கிறது. தகவல் அறிந்த கடலோர காவல் படையின் மீட் புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கப்பலில் சிக்கியிருந்தவர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் மீட்கப்படுகின்றனர். காற்று வேகமாக வீசுவதால் மீட்பு பணி கடும் சவாலாக இருக்கிறது. இன்று காலை வரை மூன்று நபர்கள் மட்டுமே மீட்கப்பட்டனர் என தகவல் வெளியாகி உள்ளது. கடலோர காவல்படையினர் மீட்பு பணியில் ஈடுபடுகின்றமை தொடர்பான படத்தை கொங்ஹொங்காங் அரசு வெளியிட்டுள்ளது. இரண்டு பகுதிகளாக உடைந்து மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலை கடுமையான அலை தாக்குவதும், ஒரு ஊழியர் மீட்பு ஹெலிக்கொகாப்டரில் ஏற்றுவதும் அந்த படங்களில் உள்ளது. கப்பல் மூழ்கும் காட்சி மற்றும் படங்கள் இணைய தளங்களில் வேகமாக பரவி வருகின்றன.



# அக்னிபாத் திட்டத்துக்கு நாம் தமிழர் எதிர்ப்பு! சிறுபான்மையினர் குறித்தும் சீமான் கேள்வி



அக்னிபாத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் தமிழர் கட்சியின் சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டார். பின்னர் செய்தியாளர்களோடு அக்னிபாத் திட்டம் பற்றி கிண்டலாக உரையாடிய சீமான், மத்திய அரசுத் தரப்பினர் ஏற்கனவே 15 லட்ச ரூபா வங்கியில் நமக்கு போட்டுள்ளனர். அதேபோன்று அக்னிபாத் திட்டத்தில் சேரும் இளைஞர்களுக்கு 12 லட்ச ரூபா கொடுக்கப் போகிறார்களா? அக்னிபாத்திட்டத்தில் இணையும் வீரர்களை எலெக்ட்ரீஷியன், பிளம்பர் ஆக்கப் போகிறோம் என மத்திய அமைச்சர்கள் கூறுகிறார்கள்.

அக்னிபாத் திட்டத்தை நாம் தமிழர் கட்சி எதிர்க்கிறது என்று தெரிவித்த சீமான், அக்னிபாத் திட்டத்தில் எத்தனை இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களைச் சேர்க்கப் போகிறீர்கள்? சிறுபான்மையின மக்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு உள்ளதா? ஆர்.எஸ்.எஸ்.க்கான ஆள்சேர்ப்புத் தான் அக்னிபாத் திட்டம். நான்கு ஆண்டுகளுக்கு இராணுவத்திற்கு ஆள் எடுத்தால் நாட்டை எவ்வாறு பாதுகாப்பது? இது எந்த மாதிரியான அணுகுமுறை, தேசபக்தி? அக்னிபாத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடுமையாக எதிர்க்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? போன்ற கேள்விகளையும் எழுப்பினார். குடியரசுத் தலைவர் தேர்வு குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில், தேசத்தின் முதல் குடிமகனையே மக்கள் தேர்வு செய்ய முடியாது என்கின்ற அரசியல் அமைப்பு முறை சரியானதாக இருக்குமா? அதிக அளவு பழங்குடி மக்கள் பாதிக்கப்பட்டது மோடியின் ஆட்சியில்தான். பழங்குடி பெண் குடியரசுத்தலைவராக வருகிறார் என்பதற்காக வேண்டுமானால் எனது வாழ்த்துக்கள். ஆனால் ராம் நாத் கோவிந்த் குடியரசுத்தலைவராக இருந்தால் பட்டியலின மக்களுக்கு எந்த நன்மை நடந்தது ?, என கேட்டார்.

## சமாஜ்வாதி கட்சியின் உள்ள அமைப்புகள் கலைப்பு தேர்தல் தோல்வியையடுத்து அகிலேஷ் யாதவ் அதிரடி



உத்தரப் பிரதேச மாநிலத்தில் சமீபத்தில் நடைபெற்ற மக்களவை இடைத்தேர்தலில் சமாஜ்வாதி கட்சி தோல்வியைச் சந்தித்தது. இதையடுத்து, கட்சியின் தேசியத் தலைவர் பதவி தவிர அதன் அனைத்து அமைப்புகளின் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிர்வாகப் பதவிகள் நீக்கப்பட்டு, சமாஜ்வாதிக் கட்சியின் உள்ளக அமைப்புகள் அனைத்தும் உடனடியாக கலைக்கப்படுவதாக அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அக்கட்சியின் அதிகாரபூர்வ டுவிட்டரில் பதிவிட்டுள்ள சமாஜ்வாதி கட்சியின் தேசியத் தலைவர் அகிலேஷ் யாதவ், 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்குள் கட்சியை வலுப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, எனக் குறிப்பிட்டுள்ளார்.





## தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை தொடர்ந்து உயர்வடைகின்றது

தமிழகத்தில் கடந்த சில நாள்களாகக் கொரோனாப் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 2,672 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாப் பாதிப்புக்கு சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 14,504 ஆக உயர்ந்துள்ளதாகவும், கொரோனாப் பாதிப்பில் இருந்து இன்று 1,487 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் குறித்த அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னையில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் கொரோனாவால் 1,072 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், செங்கல்பட்டில் 373 பேருக்கும், கோவையில் 145 பேருக்கும், திருவள்ளூரில் 131 பேருக்கும் புதிதாக கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

## பா.ஜ.க. நிர்வாகி உறுப்பினர் ஏ.கே.47 துப்பாக்கியுடன் பிடிபட்டார்



ஜம்முவில் பிடிபட்ட லஷ்கர் – இ – தொய்பா அமைப்பு உறுப்பினர் ஒருவர் பா.ஜ.க. நிர்வாகியாக செயற்பட்டுவந்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்முவின் ரியாஸி கிராமத்தில் புதிதாக வந்து தங்கியிருந்த இரு இளைஞர்களின் நடவடிக்கை தொடர்ந்து சந்தேகத்துக்கு இடமாக இருந்து வந்துள்ளது. பகலில் வெளியே செல்வதும் நடு இரவில் வீடு திரும்புவதுமாக அவர்கள் இருந்து வந்துள்ளனர். இதனால் சந்தேகமடைந்த பொது மக்கள், நேற்று இரவு அவர்களின் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்றனர். அப்போது அவர்களின் வீட்டில் ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள், கையெறி குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் இருந்துள்ளன.

இதையடுத்து, அவர்களின் வீட்டுக்கு அருகே மறைந்திருந்த கிராம மக்கள், நேற்று நள்ளிரவு வீடு திரும்பிய அவர்களை மடக்கிப் பிடித்தனர். பின்னர் இது குறித்து பொலிஸாருக்கும் தகவல் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு வந்த பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தினர். இதில் அவர்கள் லஷ்கர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. அவர்களில் ஒருவரான தாலிப் ஹுசேன் ஷா, பா.ஜ.கவின் நிர்வாகியாக இருந்து வந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த மே 9 ஆம் திகதி பா.ஜ.கவின் ஜம்மு – காஷ்மீர் சிறுபான்மையினருக்கான தகவல் தொழிநுட்ப மற்றும் சமூக வலைத்தளப் பிரிவுகளின் பொறுப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ஆர்எஸ். பதானியா தகவல் தெரிவிக்கையில், பா.ஜ.கவில் இணைய ஒன்லைன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் கட்சியில் சேருபவர்களின் பின்புலம் குறித்தும் விசாரிப்பது சாத்தியமற்றது. ஒன்லைன் ஆள் சேர்க்கையில் இருக்கும் மிகப்பெரிய பின்னடைவு இதுதான். இதுகுறித்து கட்சி மேலிடத்துக்கு தெரிவித்துள்ளோம். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள், என்று தெரிவித்திருக்கிறார்.

இதனிடையே, குறித்த நபர்களைத் துணிச்சலாக செயல்பட்டுப் பிடித்துக் கொடுத்த கிராம மக்களுக்கு 2 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என ஜம்மு காவல்துறை அதிகாரி முகேஷ் சிங் அறிவித்திருக்கிறார்.

## இளம் வயது சபாநாயகர் தெரிவானார் பா.ஜ.கவின் ராகுல் நர்வேகர்



மகாராஷ்டிரா சட்டசபையில் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான அரசு நாளை தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவுள்ளது. இதற்காக இரண்டு நாள்கள் கொண்ட சிறப்பு சட்டசபைக் கூட்டம் இன்று தொடங்கியது.

முதல் நாளான இன்று சபாநாயகர் தேர்தல் நடைபெற்றது. சபாநாயகர் பதவிக்கு பா.ஜ.க. சார்பில் ராகுல் நர்வேக்கர், சிவ சேனா சார்பில் ராஜன் சால்வி ஆகியோர் போட்டியிட்டனர். வாக்கெடுப்பில் நர்வேகருக்கு ஆதரவாக 164 வாக்குகளும், சால்விக்கு ஆதரவாக 107 வாக்குகளும் கிடைத்தன. இதையடுத்து புதிய சபாநாயகராக ராகுல் நர்வேக்கர் தேர்வாகினார் என அறிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டேவும், துணை முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிசும், நர்வேக்கரை சபாநாயகர் இருக்கையில் அமர வைத்தனர். அப்போது உரையாற்றிய பட்னாவிஸ், ராகுல் நர்வேகர் மகாராஷ்டிராவிற்கு மட்டுமல்ல, இந்தியாவினதும் இள வயது சபாநாயகராக தெரிவாகியுள்ளார் என குறிப்பிட்டார்.

45 வயதான நார்வேக்கரின் முதலில் தேசியவாத காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராக இருந்தார். பின்னர் அதில் இருந்து விலகி சிவசேனா கட்சியில் இணைந்த அவர், அக்கட்சியின் எம்.எல். ஏயாகவும் இருந்தவர். பின்னர் 2014 ஆம் ஆண்டில் சிவசேனாவில் இருந்து விலகி பா.ஜ.கவில் அவர் இணைந்தார். தற்போது கொலாபா தொகுதி பா.ஜ.கவின் எம்.எல்.ஏயாக அவர் உள்ளார்.

# அரபு நாடுகள் தாராளமாக உதவத் தயார்; ஆனால் இந்தத் தலைமைக்கு அல்லவாம்!

## காத்தான்குடியில் முன்னாள் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

எத்தனை கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களையும் இலங்கை அரசுக்கு அள்ளிக் கொடுக்க பல அரபு நாடுகள் தயாராக இருக்கின்றன. ஆனால் எமது நாட்டின் தலைமைத்துவங்களுக்கு உதவிசெய்ய அவர்கள் ஆயத்தமாக இல்லை. ஒருவருடைய பதவியை விட நாட்டில் வாழும் ஏறத்தாழ இரண்டு கோடி மக்களின் வாழ்க்கை மற்றும் எதிர்காலம் இங்கு கவனிக்கப்பட வேண்டியது என முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.எம்.ஏ. ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடியில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

கடனுக்கு மேல் கடன். கடனுக்கு வட்டி வேறு. இந்திய அரசு பெற்றோலை ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்து 40 வீத இலாபத்தை வைத்து நமது நாட்டுக்கு தருகிறார்கள். உதாரணமாக 50 கோடி டொலரை தந்துவிட்டு 100 முதல் 200 கோடி டொலர் பெறுமதியான இலங்கையின் சொத்தை எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். இந்த அரசாங்கம் ஆட்சியிலிருக்கும் ஒவ்வொரு நாளும் எமது நாடு பயங்கரமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இப்போது நாங்கள் அனுபவித்துக்கொண்டிருப்பதல்ல கஷ்டம். இனித்தான் நாம் அதிக கஷ்டங்களை அனுபவிக்க போகின்றோம். இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு இந்த அரசாங்கம் தொடர்ந்தால் விளைவு மிகமோசமாக இருக்கும். இந்த அரசாங்கம் நாட்டின் நிலையை கருத்தில் கொண்டு உடனடியாக பதவிகளை இராஜினாமா செய்து, இந்த நாட்டை கட்டியெழுப்பும் திறமையானவர்களிடம் நாட்டை கையளித்துவிட்டு ஒதுங்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் எமது நாட்டின் ஆட்சியாளர்கள் அதிகாரத்திலிருந்து ஒதுங்கும் வரை இலங்கைக்கு உதவ முன்வராது. - என்றார்.





# மருதமுனையில் 30 வயதுக்கு மேற்பட்டோர் சகலருக்கும் விசேட மருத்துவ பரிசோதனை

## புதிய வேலைத்திட்டம் ஆரம்பம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரதேச வைத்தியசாலை முன்னெடுத்துள்ள 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் விசேட மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களுக்கான மருத்துவ அறிக்கை அட்டைகளை வழங்கும் புதிய வேலைத் திட்டம் தற்போது பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதி அனுசரணையில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையோடு இணைந்து பி.எஸ்.எஸ் (PSS) ஆரம்ப சுகாதார சேவைகள் வலுப்படுத்தல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இந்த புதிய வேலைத் திட்டத்தைமருதமுனை பிரதேச வைத்தியசாலை முன்னெடுத்துள்ளது. முதல் கட்டமாக மருதமுனை பிரதேசத்தில் உள்ள ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பொதுமக்கள் வசிக்கும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று, மருத்துவ முகாம் அமைத்து, ஆரம்ப சுகாதார மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு அவர்களுக்கான தனித்தனியான மருந்து அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பிரதேச பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம். மிஹ்லார் தலைமையில் நேற்று மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி.அப்துல் வாஜித் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொதுமக்கள் மத்தியில் உரையாற்றினார்.

இதில் பிரதேச மட்டத்திலான ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வைத்திய சிகிச்சையை பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்த பொதுமக்களுக்கு உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் இதர சுகாதார செயல்பாடுகள் குறித்தும் வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம்.மிஹ்லார் விளக்கமளித்தார். நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஏற்பாட்டாளர்கள் ஆரோக்கிய கஞ்சி வழங்கி நிகழ்வை சிறப்பித்தனர்.

# இரு வெளிநாட்டு பெண்கள் மீது பாலியல் துஷ்பிரயோகச் சம்பவம்

திருகோணமலை – நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலூர் பகுதியில் சுற்றுலாப் பயணிகளான வெளிநாட்டு பெண்கள் இருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்..

நிலாவெளி – வேலூர் பகுதியில் உள்ள உல்லாச விடுதியில் தங்கியிருந்த 28 வயது மற்றும் 31 வயதுடைய பெண்கள் இருவர் கடற்கரையோரமாக சென்றுள்ளனர்.

இதன்போது உள்வீதியூடாக வந்த இளைஞன் இரு யுவதிகளையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதே பகுதியை சேர்ந்த 18 வயதுடைய சஹ்ரான் என்ற இளைஞரைத் தாங்கள் கைது செய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலியல் துஷ்பிரயோக தொடர்பில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த இரண்டு பெண்களும் சட்டவைத்திய நிபுணர் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காரைதீவு, மாளிகைக்காட்டை ஊடறுத்து ஓடும் நீரோடை சீர்கெட்டநிலைமையில்!

## துப்புரவு செய்ய வலியுறுத்தல்

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள காரைதீவு, மாளிகைக்காடு பிரதேசத்தை இடையறுத்து ஓடிக்கொண்டிருக்கும் தோணா(நீரோடை) குப்பைகள், விலங்குக் கழிவுகள் கொட்டப்பட்ட மற்றும் சல்பீனியாக்கள் நிறைந்த நீரோடையாக பலமாதங்களாகக் காட்சியளிக்கிறது. இதனால் கடுமையான சுகாதார சீர்கேடுகளை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இந்த நீரோடையை அண்டியதாக காரைதீவில் ஒரு வாசிகசாலையும், மாளிகைக்காட்டில் ஒரு வாசிகசாலையுமாக இரு வாசிகசாலைகள், பாலர் பாடசாலை, பொதுமக்கள் குடியிருப்புக்கள், 500 மாணவர்களுக்கு மேல் கல்வி பயிலும் பிரதேசத்தின் முக்கிய பாடசாலை, வங்கி என்பன அமைந்துள்ளன. இப்பிரதேசத்தில் இருந்து அடிக்கடி துர்நாற்றம் வீசுவதாக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அது மாத்திரமின்றி குப்பைகள் மற்றும் சல்பினியாக்களினால் இந்த நீர்நிலை அடைத்துக் காணப்படுவதனால் நீர் வடிந்தோட முடியாத நிலையும் உருவாகியுள்ளது. தேங்கும் நீரினால் பெரும் அசௌகரியங்கள் நேருகின்றன.

முறையற்ற திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் காரணமாக நீர்நிலை ஓரங்களில் திண்மக்கழிவுகள், விலங்குப் பாகங்கள் வீசப்பட்டுக் காணப்படுகின்றன. இதனால் கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் அதிகரித்து காணப்படுவதுடன் நீர்நிலையை அண்டிய பிரதேசங்களில் கண்டல் தாவரங்களும் வளர்ந்துள்ளன. இந்த நீர்நிலை (தோணா) மற்றும் நீர்நிலை ஓரங்களைத் துப்புரவு செய்வதற்கான ஏற்பாடுகளை காரைதீவு பிரதேச சபை, பிரதேச செயலகம், நீர்ப்பாசன திணைக்களம் போன்ற சம்பந்தப்பட்ட தரப்புகள் செய்ய உடனடியாக முன்வர வேண்டும் என அல்-மீஸான் பவுண்டேஷன், ஸ்ரீலங்கா மற்றும் பொதுமக்கள் இணைந்து கோரிக்கை விடுக்கின்றனர்.







# அமெரிக்கப் பெண்கள் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளரானார் சந்தர்போல்

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்த சிவனரைன் சந்தர்போல், அமெரிக்காவின் சீனியர் பெண்கள் மற்றும் 19 வயதுக்குட்பட்டோருக்கான அணிகளின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு 18 மாத கால ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்க கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்த நியமனம் குறித்து சந்தர்போல் கருத்து வெளியிடுகையில், இந்த அணிகளை சிறந்தவையாக முன்னெடுத்துச்செல்ல அனைத்து வகையிலும் பக்கபலமாக இருப்பேன், என்று தெரிவித்திருக்கிறார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் இடதுகை துடுப்பாட்ட வீரராக சந்தர்போல், டெஸ்ட் கிரிக்கெட்டில் 10,000 ஓட்டங்களுக்கு மேலாக எடுத்த 14 வீரர்களில் ஒருவராவார். மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக 164 டெஸ்ட் மற்றும் 268 சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார்.

# நியூசிலாந்தின் ரி-20 அணித்தலைவர் மிட்ச்செல் சான்ட்னருக்கு கொரோனா



நியூசிலாந்து கிரிக்கெட் அணி அயர்லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி-20, 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட வுள்ளது. இந்தத் தொடருக்கான அணியில் முன்னணி வீரர்களான கேன் வில்லியம்சன், கொன்வே, டிம் சவுத்தி, டிரண்ட் போல்ட் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

ஜுலை 10ஆம் திகதி முதல் நடக்கவிருக்கும் ரி-20 போட்டிகளுக்கு நியூசிலாந்து அணிக்கு சுழற்பந்து-வீச்சாளர் மிட்ச்செல் சான்ட்னரும், ஒருநாள் அணிக்கு டொம் லதாமும் கப்டன்களாக அறிவிக்கப்பட்டனர். இந்த நிலையில், சான்ட்னர் தற்போது கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என நியூசிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அயர்லாந்துத் தொடருக்கான நியூசிலாந்தின்தலைமைப்பயிற்சியாளர் கேரி ஸ்டீட் தகவல் வழங்கும் போது, மிட்ச்செல் சான்ட்னர் தற்போது நலமுடன் இருக்கிறார். எனினும், அயர்லாந்துத் தொடருக்கான அணியில் அவர் இணைவது என்பது தற்போது உறுதிப்படுத்த முடியாத ஒன்றாக உள்ளது. அவர் முழுவதுமாக குணமடைந்த பிறகு அணியில் இணைவார், என்று தெரிவித்திருக்கிறார்.

# கொரோனாவில் இருந்து மீண்டார் ரோகித் சர்மா



இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் ரோகித் சர்மாவுக்கு கடந்த மாதம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி உள்ளூர் அணிக்கெதிராக கடந்த மாதம் 23 ஆம் திகதி பயிற்சிப் போட்டியில் விளையாடியது. அப்போது, இந்திய அணியின் தலைவர் ரோகித் சர்மாவுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டது.

இதன் காரணமாக இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான கடைசி டெஸ்டில் ரோகித் சர்மா விளையாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இந்திய டெஸ்ட் அணியின் கப்டனாக பும்ரா நியமிக்கப்பட்டார். கொரோனா பாதிக்கப்பட்ட ரோகித் சர்மா தனிமைப்படுத்திக்கொண்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், நேற்று மேற்கொள்ளப்பட்ட கொரோனாப் பரிசோதனையின்போது நெகட்டிவ் முடிவு கிடைத்துள்ளதால், ரோகித் சர்மா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன. இதையடுத்து இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள முதலாவது ரி-20 போட்டியில் ரோகித் சர்மா களமிறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



# விம்பிள்டன் டென்னிஸ் மகளிர் காலிறுதி துனிசிய வீராங்கனை ஜபீர் நுழைந்தார்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டன் நகரில் நடைபெற்று வருகிறது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த நான்காவது சுற்று ஆட்டம் ஒன்றில் மூன்றாவது துனிசியாவின் ஒன்ஸ் ஜபீரும் பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டன்ஸ்சும் மோதினார்கள். இதில் ஜபீர் 7-6 (11-9), 6-4 என்ற நேர் செட் கணக்கில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

காலிறுதியில் செக்குடியரசைச் சேர்ந்த மரியா பவுஸ்கோவை ஒன்ஸ் ஜபீர் சந்திக்கவிருக்கிறார். ஏனைய இரு நான்காம் சுற்று ஆட்டங்களில் தஜ்னா மரியா, ஜூலி நீமையர் ஆகியோர் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.



# விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் பிரிவு; ஜோகோவிச்-சின்னர் காலிறுதியில்

லண்டனில் நடந்து வரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்று ஆட்டத்தில் உலகின் முன்னணி வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், நெதர்லாந்தின் ரிஜ்தோவெனுடன் மோதியிருந்தார். இதில் 6-2, 4-6, 6-1, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற ஜோகோவிச் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் இத்தாலி வீரர் ஜனிக் சின்னர், ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்காரஸை எதிர்கொண்டிருந்தார். அந்தப் போட்டியில் 6-1, 6-4, 7-6, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார் சின்னர்.

நாளை நடைபெறும் காலிறுதியில் ஜோகோவிச், சின்னரை எதிர்கொள்ள விருக்கிறார்.

# நாமலின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது 10 அரசியல் கட்சியின் தலைவர்களால்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

புதிய அரசாங்கத்தை ஸ்தாபிக்க பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணையுமாறு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கையை நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 10 அரசியல் கட்சி தலைவர்கள் நிராகரித்துள்ளனர்.

நாடும், நாட்டு மக்களும் தற்போது மிக மோசமான நெருக்கடியை எதிர்கொள்வதற்கு ராஜபக்ஷர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளே காரணம்.

ஆகவே, ராஜபக்ஷர்களுடன் இனியொருபோதும் ஒன்றிணையப் போவதில்லை எனத் தீர்மானித்துள்ளோம் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தம்மிடம் உள்ளது என்ற தைரியத்தில் தன்னிச்சையாகச் செயற்பட்டது.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் போது சுகாதார அறிவுறுத்தல்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. மாறாக அரசியல் காரணிகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கப்பட்டது.

கொவிட் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய முடியும் என அறிவியல் ரீதியிலான ஆலோசனை வழங்கப்பட்ட போதும் அதற்கு மதிப்பளிக்கப்படாமல் அரசியல் மற்றும் இனவாத செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அறிவியல் ரீதியிலான ஆலோசனைகளுக்கு மதிப்பளிக்கப்படாத காரணத்தினால் முஸ்லிம் சமூகத்தினரதும், முஸ்லிம் நாடுகளினதும் அதிருப்தியை பெற்றுக்கொள்ள நேரிட்டது.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவிற்கு நிதியமைச்சு பதவி வழங்கப்பட்டது. பொருளாதாரம் தொடர்பில் அடிப்படைத் தகைமையற்ற அவருக்கு நிதியமைச்சு பதவியை வழங்க வேண்டாம் என பலமுறை எடுத்துரைத்தும் அது தொடர்பாக ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை. தவறான பொருளாதார மற்றும் நிதி முகாமைத்துவம் முழு பொருளாதாரத்தையும் பாதிப்பிற்குள்ளாக்கியது.

மக்களின் போராட்டத்துக்கு முன் நிறைவேற்றதிகாரம் , மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆகியவை ஒரு பொருட்டல்ல என்பது நடைமுறையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டு நல னைக் கருத்திற் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கும் தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக குறிப்பிட்டுள்ளோம்.



ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தி பொதுஜன பெரமுன தலைமையில் புதிய அரசாங்கத்தை ஸ்தாபிக்க ஒன்றினைணயுமாறு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கையை நிராகரித்துள்ளோம்.

வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளமைக்கு ராஜபக்ஷர்கள் மாத்திரமே பொறுப்புக்கூறவேண்டும். ஆகவே, இனியொருபோதும் ராஜபக்ஷர்களுடன் ஒன்றிணையப் போவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

# திருமணப் பதிவுகள் குறைவடைகின்றன

நாட்டில் திருமணம் செய்து கொள்வோரின் எண்ணிக்கையில் சடுதியான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பிரச்சினை மற்றும் பொருளாதாரநெருக்கடிநிலைமை காரணமாக இவ்வாறு திருமணங்கள் குறைவடைந்துள்ளன எனத் திருமண பதிவு, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது, இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் திருமணபதிவுகளின்எண்ணிக்கை 85 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக திருமண பதிவு, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களின் சங்கத்தின் செயலர் சுசந்தா ஹேமசிறி ரணசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் திருமண பதிவு, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களின் சங்கத்தின் செயலர் சுசந்தா ஹேமசிறி ரணசிங்க கருத்து தெரிவிக்கையில் –

இந்த மாதம் வழமையாக அதிகளவிலான திருமணங்கள் இடம் பெறும் மாதம். குறிப்பாக திருமண மண்டபங்களைப் பதிவு செய்வது கூட பெரும் நெருக்குதலுடன் கூடிய காலப்பகுதியாக இந்த மாதம் வழமையாக அமைந்திருக்கும். ஆனால் இந்த வருடம் அவ்வாறில்லை.

திருமணப் பதிவு தொடர்பில் கிடைக்கப் பெற்றுள்ள முன்னறிவிப்புக்களைப் பார்க்கும் போது மிகப் பெரும் அளவில் திருமண பதிவு எண்ணிக்கை வீழ்ச்சி கண்டுள்ளது.

அவ்வாறு திருமண பதிவு தொடர்பில் திகதி ஒதுக்கிக் கொள்ளப்பட்டுள்ள நிலைமை மிகக் குறைவாக காணப்படுகிறது. – எனத் தெரிவித்தார்.

# நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள மருந்தகங்கள் மூடப்படும் அபாயம்

நாடளாவிய ரீதியில் உள்ள மருந்தகங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பல்வேறு துறைகளும் கடுமையான பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளன.

இந்த நிலையில் மருந்தகங்களுக்கு மருந்துகளை விநியோகிக்கும் வாகனங்க ளுக்கான எரிபொருள் கிடைக்காத பட்சத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள மருந்தகங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது மருந்தகங்களில் ஒரு வாரத்துக்குத் தேவையான மருந்துகளே காணப்படுகின்றன எனவும் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே மருந்தகங்களுக்கு மருந்துகளை விநியோகிக்கும் வாகனங்களுக்கான எரிபொருளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் எனவும் அந்த சங்கம் கோரியுள்ளது.

# ரம்புட்டான் பழத்தை விழுங்கிய 10 வயது சிறுவன் யாழில் சாவு

ரம்புட்டான் பழத்தை விழுங்கிய 10 வயதுச் சிறுவன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறை கொல்லன்கலட்டியைச் சேர்ந்த தர்மராசா தர்சிகன் (வயது –10) எனும் சிறுவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் ரம்புட்டான் பழத்தை விழுங்கிய நிலையில், திடீரென சுகவீனமடைந்து மூச்சு எடுக்க அவதிப்பட்ட போது , தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் . எனினும் சிறுவன் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது. .

# தம்பலகாமம் பிரதேசத்தில் ஆயுள்வேத வைத்திய சேவை







(பைல் இஸ்மாயில்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தம்பலகாமம் பிரதேச மக்கள் ஆயுள்வேத வைத்திய சேவைகளை பெற்றுக்கொள்வதில் பாரிய இன்னல்களை எதிர்நோக்கி வந்ததையடுத்து, அப்பிரதேச மக்கள் பயனடையும் வகையில் முற்றிலும் இலவச ஆயுள்வேத நடமாடும் சேவை ஒன்றினை கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஶ்ரீதரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கப்பல்துறை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அன்ரன் அனெஸ்ரினின் ஒழுங்கமைப்பில் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நடமாடும் சேவையில், தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜி.சம்பிக்க பண்டார மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், சுதேச மருத்துவத் திணைக்களத்தின் நிருவாக உத்தியோகத்தர் திருமதி எஸ்.நவேந்திரராஜா உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். கடந்த பல வருடங்களாக தம்பலகாமம் பிரதேச மக்கள் ஆயுள்வேத வைத்திய சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்காக பல கிலோ மீற்றர் தூரமுள்ள கந்தளாய் பிரதேசத்திலுள்ள வெண்டராசபுர ஆயுள்வேத வைத்தியசாலைக்கோ அல்லது திருகோணமலை கப் பல்துறை ஆயுள்வேத வைத்தியசாலைக்கோ சென்றுவர வேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலைமைக்குள்ளாகி வந்தனர். குறிப்பாக, இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பாரியதொரு பொருளாதார சவால் நிலைமைக்கு மத்தியில் ஆயுள்வேத மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருந்த அம்மக்களுக்கு இவ்வாறானதொரு நிலைமையை உருவாக்கிக்கொடுத்த கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளருக்கும், தம்பலகாமம் தவிசாளருக்கும் அப்பிரதேச மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். இந்த ஆயுள்வேத நடமாடும் வைத்திய சேவையில் வைத்தியர்களான சமில் கருணாரத்ன, ரீ.கௌரிஸ்வரன், எ.ரி.எப்.முஸாபிறா ஆகியோர் கலந்து கொண்டு வைத்திய சிகிச்சைகளை வழங்கியமையுடன் அவர்களுக்குத் தேவையான மருந் துகளையும் வழங்கி வைத்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.07.2022இல் வெளியிடப்பெற்றது.